செ. கு. எண்: 055 நாள் :02.03.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 2.3.2014

சென்னை துறைமுகத்தில் இருந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான நீர் மூழ்கி கப்பலில் 27.1.2014 அன்று விஷ வாயு தாக்கியதில் அப்போது பணியிலிருந்த தொழிலாளர்கள் திரு. மகேந்திரன் மற்றும் திரு. பவானி சங்கர் ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பொசுக்குடி ஊராட்சி தஞ்சாக்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுரேந்திரபாண்டி என்பவரின் மனைவி இந்திராணி 3.2.2014 அன்று பரமக்குடி கீரந்தை சாலை அருகே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்தின் கீழ் பணியில் ஈடுட்டிருந்த போது மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ஆரூர் ஊராட்சியைச் சேர்ந்த திரு. தைலான் என்பவரின் மனைவி அங்கம்மாள் 4.2.2014 அன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்தின் கீழ் பணியில் ஈடுபட்டிருந்த போது மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், பணப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வாசுதேவன் என்பவரின் மகன் சிறுவன் தேவன் 7.2.2014 அன்று பணப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், பள்ளி நேரத்தின் போது திடீரென்று வலிப்பு ஏற்பட்டதில் உயிரிழந்தான் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9